**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 166/2022 DW1**

27.11.2025 **பி.வா.சா.1 சீனிவாசன் சத்திய வாக்குமூலத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை -**

வழக்கு சொத்தானது ஆதியில் நீலகவுண்டர் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். நீலகவுண்டர் மற்றும் அவரது மனைவி தெய்வாணைக்கு ரங்கநாதன், நடராஜன் மற்றும் ராஜ்குமார் ஆகியோர் பிறந்தார்கள் என்றால் சரிதான். ரங்கநாதனின் முதல் மனைவி பெயர் உமா என்றால் சரிதான். ரங்கநாதன், உமாவிற்கு சொர்ணலட்சுமி, பூவையா, மோகன் மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பிறந்தார்கள் என்றால் சரிதான். உமா இறந்த பிறகு ரங்கநாதன் பாக்கியலட்சுமி என்பரை திருமணம் செய்தார் என்றால் சரிதான். பாக்கியலட்சுமிக்கும், ரங்கநாதனுக்கும் பிறந்தவர்கள் தான் சுந்தர் மற்றும் மகேஸ்வரி என்றால் சரிதான். சுந்தர் இளவராக இருக்கும் போதே திருமணம் செய்யாமல் இறந்து விட்டார் என்றால் சரிதான். நீலகவுண்டர் இந்த வழக்கு சொத்தை 2007ம் ஆண்டு பூவையா, மோகன், கிருஷ்ணமூர்த்தி மற்றும் சுந்தர் ஆகியோருக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் இருந்த வீட்டில் மேற்படி நால்வர் மட்டுமே குடியிருந்தார்கள் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் நீலகவுண்டர் ரூ. 1,40,000/-க்கு கிரையம் பெற்றதாக கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரையத்திற்கு பிறகு நீலகவுண்டர் பெயரில் பட்டா, சிட்டா, அடங்கல் ஆகியவை மாறியது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 அடிப்படையில் பூவையா, மோகன், கிருஷ்ணமூர்த்தி மற்றும் சுந்தர் ஆகியோர் பெயர்களுக்கு பட்டா, சிட்டா, அடங்கல், வீட்டு வரி ரசீது, குழாய் வரி ரசீது ஆகியவை மாறியது என்றால் அவர்களாகவே மாற்றிக் கொண்டார்கள். 2007க்கு பிறகு மேற்படியோர் தானம் பெற்ற வீட்டில் வசித்தார்கள் என்றும், அதனால் தான் அவர்கள் பெயருக்கு மேற்படி ஆவணங்கள் பெயர் மாற்றம் ஆனது என்று சொன்னால் சரியல்ல. பூவையா, மோகன், கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் மும்பையில் தொழில் நிமித்தம் வசிக்கிறார்கள் என்றால் சரியல்ல, அவர்கள் அங்கு தான் ஆதியில் இருந்து வசிக்கிறார்கள். வருடத்திற்கு ஒரு முறை ஊருக்கு வந்து போவார்கள். சுந்தரின் தாயார் வாதி பாக்கியலட்சுமி தான் தற்போது வழக்கு சொத்தில் உள்ள வீட்டில் நிரந்தரமாக வசிக்கிறார் என்றால் சரியல்ல. சுந்தர் இறந்து விட்ட காரணத்தால் பாக்கியலட்சுமி தாயார் என்ற முறையில் வழக்கு சொத்தில் உரிமை உள்ளதாலும், மற்ற பூவையா, மோகன், கிருஷ்ணமூர்த்தி ஆகியோருக்காகவும் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து எவ்வளவு மதிப்புடையது என்று கேட்டால் தெரியவில்லை. வழக்கு சொத்து மதிப்பு கூடுதலானது என்று எனது எதிர்வழக்குரையில் எந்தவித ஆதாரமும் இல்லாமல் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 தானசெட்டில்மெண்ட் ரத்து செய்யப்பட்டது சட்டப்படி ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுக்கும்

போதே நீலகவுண்டர் மேற்படி தான செட்டில் மெண்ட் பத்திரம் ரத்து செய்வதற்கு அதிகாரம் இல்லை என்றும், அவ்வாறு ரத்து செய்தால் அது செல்லத்தக்கது அல்ல என்றும் கூறியுள்ளார் என்றும், அவ்வாறு ரத்து செய்தால் அது செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ.7 ரத்து பத்திரத்திற்கு பிறகு நீலகவுண்டர் ஏதேனும் ஆவணம் மேற்படி சொத்து குறித்து ஏதும் எழுதி வைத்தாரா என்றால் இல்லை. நீலகவுண்டர் ரத்து செய்ததற்கு பிறகு வேறு ஆவணம் எழுதி வைத்ததாக நான் எதிர்வழக்குரை மற்றும் நிருபண வாக்குமூலத்தில் சொல்லிவிட்டு தற்போது முன்னுக்கு பின் முறனாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ரத்து ஆவணத்திற்கு பிறகு நீலகவுண்டர் எனது பெயருக்கும், செல்வகுமாருக்கும் ஆவணம் எழுதி வைத்தார். தானப்பத்திரம் எழுதி வைத்து விட்டு அதனை மீண்டும் ரத்து செய்வதற்கு நீலகவுண்டருக்கு அதிகாரம் இல்லை என்றும், அப்படி இருக்கும் போது தானப்பத்திரத்தை ரத்து செய்ததும், அதன் பிறகு எங்கள் பெயருக்கு ஆவணம் எழுதி வைத்ததும் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நீலகவுண்டர் என் பெயருக்கு எழுதி வைத்த சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் பரப்பளவு 40 அடி அகலம், 80 அடி நீளம் ஆகும். அந்த சொத்தை சுற்றிலும் யாருக்கு சொந்தமான சொத்து உள்ளது என்று கேட்டால் யாருக்கு சொந்தமானது என்று எனக்கு தெரியாது ஆனால் அங்கு எனது நண்பர்கள் குடியிருக்கிறார்கள். வழக்கு சொத்தில் வாதி தான் குடியிருக்கிறார் என்றும், அதனால் தான் எனக்கு வழக்கு சொத்தின் ஜக்குபந்தி தெரியவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 நடைமுறைபடுத்தப்பட்டு அதில் வாதி தான் வசித்து வருகிறார் என்றும், ஆகவே வா.சா.ஆ.2ஐ ரத்து செய்தது செல்லாது என்றும் , வாதி கேட்டுக் கொண்டபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.